**செய்தி வெளியீடு எண்: 241** **நாள்: 22.04.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (22.4.2013) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் திருமதி. வெ. அனுசுயா அவர்கள் தலைமையில் சங்க நிர்வாகிகள் சந்தித்து, அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத்தை உயர்த்தியமைக்காகவும், அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளித்தமைக்காகவும் நன்றி தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமையினை தங்களது குடும்பத்துடன் மகிழ்வுடன் செலவிடும் வகையில், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தமிழ்நாடு அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் நலச் சங்க நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 22.4.2013